கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

LIBRARY
11 FEB 2011
Eastern University, Sri Lanka.

**FA 202 உலகக் கலை வரலாறு**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. புராதன மக்களால் நிகழ்த்தப்பட்ட சடங்குகளை கலைகளின் தோற்றத்துக்கு அடிப்படையாகக் கொள்ள முடியுமா என்பதைப் பரிசீலிக்குக.

02. வரலாற்றுக்கு முற்பட்டகாலக் கலைகளின் பண்புகளை பலியோதிக் கலை (Paliothic Art), மெசோலிதிக் கலை (Mesolithic Art), நியோலிதிக் கலை (Neolithil Art) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

03. எகிப்தியக் கட்டிடங்களின் அழகியல் அடிப்படைகளைக் குறிப்பிட்டு, எகிப்தியக் கட்டிடக்கலையுடன் இணைந்ததாக சிற்ப, ஓவியக் கலைகள் பெற்ற வளர்ச்சியை மதிப்பிடுக.

04. கிரேக்க சிற்பங்களின் பண்புகள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.

05. ரோமக் கட்டிடங்களின் பண்புகளைக் குறிப்பிட்டு, அவற்றில் கிரேக்க கட்டிடக்கலையின் செல்வாக்கு வெளிப்படுமாற்றை மதிப்பிடுக.

06. "கிறிஸ்தவக் கலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்ற காலமாக மத்தியகாலம் விளங்குகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மத்திய காலத்தில் தோற்றம்பெற்ற கட்டிட, சிற்ப, ஓவியக் கலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

07. மறுமலர்ச்சிக் காலத்தில் ஓவியக்கலை பெற்ற வளர்ச்சியை லியானாடோ டாவின்சி அல்லது மைக்கல் அஞ்சலோவின் ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

08. 20ம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற, கலைக்கோட்பாடுகளில் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றில் ஒரு கோட்பாடு பற்றி விரிவாக விளக்குக.

*****